www.Padasalai.Net www.CBSEtips.in

DINDIGUL DISTRICT

10 - ஆம் வகுப்பு **அரையாண்டுத் தேர்வு - 2022** HMD

காலம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I சரியான விடையைத் தேர்ந்தெடு. 15 X 1 = 15

1. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ............ . அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. " சிலம்பு " அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது ............ . அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
3. குலசேகர ஆழ்வார் வித்துவக் கோட்டம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே ........ அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி
4. அருந்துணை என்பதைப் பிரித்தால் ................ . அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை
5. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .................. . அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள் இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
6. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி. கருதியது ........... . அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
7. இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன் – என்ற வரிகள் இடம்பெற்ற நூல் ............... . அ) அகநானூறு ஆ) மதுரைக்காஞ்சி இ) புறநானூறு ஈ) கலித்தொகை
8. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி ................. . அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
9. துகிர் என்ற சொல்லின் பொருள் ................ . அ) பட்டு ஆ) பவளம் இ) பண்பு ஈ) படை
10. வினா .................. வகைப்படும். அ) 6 ஆ) 8 இ) 10 ஈ) 4
11. எய்துவார் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது? அ) கூவிளம், தேமா, மலர் ஆ) தேமா, புளிமா, காசு இ) கூவிளம், புளிமா, நாள் ஈ) புளிமா, தேமா, பிறப்பு

பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

*விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கருவளர் வானத்து இசையில் தோன்றி*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்*

12. இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது? அ) சிலப்பதிகாரம் ஆ) பரிபாடல் இ) பெரியபுராணம் ஈ) கலித்தொகை
13. இப்பாடலின் ஆசிரியர் .......... . அ) நல்லுந்துவனார் ஆ) வள்ளுவர் இ) கபிலர் ஈ) கீரந்தையார்
14. அடி மோனைச் சீர்களை எடுத்து எழுதுக. அ) ஊழி ஊழ் ஆ) உரு உந்து இ) கருவளர் வானத்து ஈ) விசும்பில் வானத்து
15. வானம் என்னும் பொருள் தரும் சொல் ............. . அ) வளி ஆ) இசை இ) விசும்பு ஈ) ஊழி

II எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண். 21 க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4 X 2 = 8

16. வசன கவிதை – குறிப்பு வரைக.
17. வினா அமைக்க. அ) செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம். ஆ) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

18. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
அ) உழவர்கள் மலையில் உழுதனர். ஆ) முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்கு சென்றனர்.
19. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.
20. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
21. பல்லார் ........... எனத் தொடங்கும் குறளை எழுதுக.

III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 X 2 = 10

22. சொற்களை இணைத்து நான்கு புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, மேகலை, வான், மணி, பூ, பொன்.
23. *வல்லின ஒற்றை இட்டும், நீக்கியும் எழுதுக.*
எல்லா பறவைகளுகும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளது போல புறசெவிமடல் இருக்காது.
24. தொழிற்பெயரின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.
அ) பசுமையான ............. ஐக் ............. கண்ணுக்கு நல்லது. *(காணுதல், காட்சி).*
ஆ) காட்டு விலங்குகளைச் ............... தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ........... திருந்த உதவுகிறது. *(சுட்டல், சுடுதல்)*
25. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
*கலவைச் சொற்றொடராக மாற்றுக.*
26. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக. அ) திருநெல்வேலி ஆ) கோயம்புத்தூர்.
27. *கலைச்சொல் தருக.* அ) Vowel ஆ) Humanism
காதுகேளாதோருக்கான மாற்று வினா.
சொல்லை இரு விதமாகப் பிரித்து பொருள் தருக. கானடை.
28. தமிழெண்களாக எழுதுக. அ) 67 ஆ) 403

IV எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2 X 3 = 6

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
31. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில் தான் காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிவைத்தார். தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன. வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
அ) இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் எந்த ஆண்டு மிகச் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது?
ஆ) வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராக என்ன செய்தார்?
இ) சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தவர் யார்?

V எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. வினா எண். 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 2 X 3 = 6

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.
33. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.
34. அடிபிறழாமல் எழுதுக.
அ) அன்னை மொழியே ...... எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடல் 4 வரிகள் மட்டும். (அல்லது)
ஆ) தூசும் துகிரும் ........... வீதியும் வரையுள்ள சிலப்பதிகாரப் பாடல்.

VI எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2 X 3 = 6

35. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம் "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார் " என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்கு சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக் கொடுத்து."என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். இப்பகுதியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

36. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அலகிட்டு வாய்ப்பாடு தருக.

கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

VIII அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 X 5 = 25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. *(அல்லது)*

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. *(அல்லது)*

ஆ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40. நயம் பாராட்டுக.

*கவிஞர் யானோர் காலக் கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!*
*இவைசரி யென்றால் எதிர்ப்பதென் வேலை!*
*ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை அறிக!*

– கண்ணதாசன்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

41. வீட்டு எண் 30, பூங்கா தெரு, திருச்சி என்ற முகவரியைச் சேர்ந்த க. அழகுமலையின் மகள் அ. விமலா என்பவர் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராகச் சேரவிருக்கிறார். அதற்கான படிவத்தை நிரப்பு.

42. காட்சியை கண்டு கவினுற எழுதுக. *(அல்லது)*



ஆ) திறன்பேசியில் எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருக்கும் தங்கையை நெறிபடுத்த நீங்கள் செய்யும் முயற்சிகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

VIII அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3 X 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் எழுதுக. *(அல்லது)*
ஆ) உனக்குத் தெரிந்த ஏதேனும் ஐந்து நிகழ்கலை வடிவங்கள் குறித்து எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதையைக் கொண்டு விளக்குக. *(அல்லது)*
ஆ) மேரியின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை `புதிய நம்பிக்கை' கதையின் வழி நிறுவுக.

45. கட்டுரை எழுதுக. அ) மாணவப் பருவமும், நாட்டுப்பற்றும்.
குறிப்பு : நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு.
*(அல்லது)* ஆ) சான்றோர் வளர்த்த தமிழ். குறிப்பு : முன்னுரை – தமிழ் வளர்த்த சான்றோர்கள் – தமிழின் சிறப்பு – முடிவுரை.

---

## நூலக உறுப்பினர் படிவம்

............................................ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ..........................................................................

அட்டை எண். **உறுப்பினர் சேர்க்கை அட்டை** உறுப்பினர் எண் [ ]

1. பெயர் ..................................................
2. தந்தை பெயர் ..................................................
3. பிறந்த தேதி ..................................................
4. வயது ..................................................
5. படிப்பு ..................................................
6. தொலைபேசி எண். ..................................................
7. முகவரி ..................................................
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ..................................................

நான் ................................ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ....................................., சந்தா தொகை ரூ. .......................... ஆக மொத்தம் ரூ. ...................... ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் :

தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் .................................. அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று. அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம் (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி / தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி/ மாநகராட்சி/ ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com